அனுப்புநர்
திரு ம கோவிந்த ராவ் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

பெறுநர்
செயற்பொறியாளர்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
பராமரிப்பு கோட்டம்
நாகப்பட்டினம்

ந.க. 985 /2021/நி.அ1 நாள் 20.01.2021

அய்யா,

| | |
|---|---|
| பொருள் | TWAD-நாகப்பட்டிணம் மாவட்டத்தில் 893 குடியிருப்புகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குதல் -தஞ்சாவூர் மாவட்டம் -திருவிடைமருதூர் வட்டம் மற்றும் வட்டாரம் -மகாராஜபுரம் வனப்பகுதிக்கு அருகே கொள்ளிடம் ஆற்றில் நீர் சேகரிக்கும் மையம் அமைத்தல் (Collector well cum food bridge) -வனத்துறைக்குட்பட்ட 4650 ச.மீ நிலத்தினை பயன்படுத்த வனத்துறையின் அனுமதியினை பெற ஏதுவாக அத்திட்டத்தினை செயல்படுத்த வேறு மாற்று இடமில்லை(Esseential Certificate And form1) என சான்று கோரியதற்கு- சான்று வழங்குதல் -தொடர்பாக |
| பார்வை | 01.நாகப்பட்டிணம் தமிழ்காடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்பு கோட்ட செயற்பொறியாளர் ந.க. 091220/F/CWSS/TO893/forest/2020 நாள் 9.12.2020<br>02.இவ்வலுவலக கடித ந.க.எண்.14923/2020/எல்.ஆர்1. நாள் 28.12.2020<br>03.மாவட்ட வன அலுவலர் ,தஞ்சாவூர் கோட்டம் ந.க. 6091/2020/நாள். 29.12.20 |

..............................

நாகப்பட்டிணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்பு கோட்ட செயற்பொறியாளர் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் உள்ள 893 குடியிருப்புகளுக்கு கூட்டுகுடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க தஞ்சாவூர் மாவட்டம் ,திருவிடைமருதூர் வட்டம் மற்றும் வட்டாரம் மகாராஜபுரம் வனப்பகுதிக்கு அருகே கொள்ளிடம் ஆற்றில் நடைப்பாதையுடன் கூடிய நீர் சேகரிப்பு மையம் அமைக்கப்பட உள்ளதால் அப்பகுதிக்கு அருகே உள்ள வனத்துறைக்குட்பட்ட 4650 ச.மீ நிலத்தினை பயன்படுத்த வேண்டியுள்ளது எனவும் அதற்கான வனத்துறையின் அனுமதியினை பெற ஏதுவாக அத்திட்டத்தினை செயல்படுத்த வேறு மாற்று இடமில்லை (Essential Certificate)என சான்று வழங்குமாறு பார்வை (1) -ல் காணும் கடிதத்தில் கேட்டுக்கொண்டதின் பேரில் தஞ்சாவூர் மாவட்ட வன அலுவலருக்கு பார்வை (2)-ல் காணும் கடிதத்தின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

அதன் பேரில் தஞ்சாவூர் மாவட்ட வன அலுவலர் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் உள்ள 893 குடியிருப்புகளுக்கு கூட்டுகுடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க தஞ்சாவூர் மாவட்டம் ,திருவிடைமருதூர் வட்டம் மற்றும் வட்டாரம் , மகாராஜபுரம் வனப்பகுதிக்கு அருகே கொள்ளிடம் ஆற்றில் நடைப்பாதையுடன் கூடிய நீர் சேகரிப்பு மையம் அமைக்கப்பட உள்ள அப்பகுதிக்கு

அருகே வனத்துறைக்குட்பட்ட 4650 ச.மீ நிலத்தினை பயன்படுத்தி கொள்ளலாம் எனவும் அத்திட்டத்தினை செயல்படுத்த வேறு மாற்று இடமில்லை (Essential Certificate) என சான்று மற்றும் படிவம்1-ம் வழங்கலாம் என பார்வை (3)-ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை (1) -ல் காணும் கடிதத்தில் கோரியவாறு நாகப்பட்டிணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்பு கோட்ட செயற்பொறியாளர் ,நாகப்பட்டிணம் மாவட்டத்தில் உள்ள 893 குடியிருப்புகளுக்கு கூட்டுகுடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க தஞ்சாவூர் மாவட்டம் ,திருவிடைமருதூர் வட்டம் மற்றும் வட்டாரம் , மகாராஜபுரம் வனப்பகுதிக்கு அருகே கொள்ளிடம் ஆற்றில் நடைபாதையுடன் கூடிய நீர் சேகரிப்பு மையம் அமைக்கப்பட உள்ள அப்பகுதிக்கு அருகே வனத்துறைக்குட்பட்ட 4650 ச.மீ நிலத்தினை பயன்படுத்தி கொள்ளவும் அத்திட்டத்தினை செயல்படுத்த வேறு மாற்று இடமில்லை (Essential Certificate) என சான்று மற்றும் படிவம்1-ம் வழங்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு. அசல் Essential certificate and form1

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/XXXXXX
மாவட்ட ஆட்சியருக்காக
தஞ்சாவூர்

///ஆணைப்படி///

கண்காணிப்பாளர்

நகல் - மாவட்ட வன அலுவலர் ,தஞ்சாவூர்

20.1.2021